



கழகத்தின் நிர்வாக சீரமைப்பு காரணமாகவும் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி கழக வளர்ச்சி பணிகள் செவ்வனே செயல்படவும் ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தில் இணைக்கப்பட்டது. அதனையொட்டி பெருந்துறை சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு பெருந்துறை சட்டமன்ற தொகுதி வளர்ச்சி பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நினைவு நாளில்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாற்றுத்திறனாளிகள் இணைப்புச் சக்கர வாகனப் பேரணி!

## கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!

சென்னை, ஆக 5 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணியில் கழக மாற்றுத்திறனாளிகள் அணியினரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தினரும் திரளாக பங்கேற்குமாறு அழைப்பு விடுத்து கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ. தங்கம் அறிக்கை விட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, 7.8.2026 வெள்ளிக்கிழமை காலை 8 மணி அளவில் ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனை கலைஞர் சிலையிலிருந்து கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் அமைதி பேரணியாக புறப்பட்டு மெரினாவில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் நினைவிடத்தை அடைந்து மலர் வளையம் வைத்து மரியாதை செய்து நினைவேந்தல் நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த அமைதிப் பேரணியில் கழக மாநில,மாவட்ட, மற்றும் பகுதி கழக வட்டக் கழக நிர்வாகிகளும், பல்வேறு அணிகளும், திரளான தொண்டர்களும் அமைதிப் பேரணிகள் பங்கேற்க உள்ள நிலையில், கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் சார்பாகவும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பாகவும் மற்றும் பல்வேறு மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினரும் தங்கள் இணைப்புச் சக்கர வண்டிகளில் கழகத் தலைவர் அவர்களுடைய தலைமையில் பேரணியாக சென்று மெரினா கடற்கரையில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளனர்.

இப்பேரணியில் கழக மாற்றுத் திறனாளிகள் அணியினரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தினரும், மற்றும் பல்வேறு மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் நிர்வாகிகளும் திரளாக பங்கேற்று கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்திட அமைதிப் பேரணியில் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ரெ.தங்கம் தெரிவித்துள்ளார்.

### திருவள்ளூர் மாவட்டம்

# பொன்னேரியில் திராவிட வட்டம் - கலந்துரையாடல் கூட்டம்!

## மாணவரணி விக்னேஷ் உதயன் ஒருங்கிணைத்தார்!

திருவள்ளூர், ஆக.5 -

தமிழ் மாணவர் மன்றம் சார்பில் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் திராவிட வட்டம் என்ற தலைப்பில் மாணவர்கள், இளைஞர்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் திராவிட இயக்கத்தின் மீது பற்று கொண்ட இளைஞர்கள் பலர் கலந்துகொண்டு தி.மு.க. ஆட்சியின் சாதனைகள் பற்றியும், தி.மு. கழகத்தால் தாங்கள் அடைந்த பயன்கள் மற்றும் சமூக மாற்றங்கள் பற்றியும் விரிவாக கலந்துரையாடினர்.

தொடர்ந்து தங்கள் பகுதிகளில் இனிவரும் காலங்களில் மாதாமாதம் திராவிட வட்ட நிகழ்ச்சி நடைபெறும் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர்.

மாநில உரிமைகளுக்காக மொழி உரிமைகளுக்காக, கல்வி உரிமைக்காக போராடும் திமுகவுடன் என்றும் மாணவர் சக்தி துணை நிற்கும் என்று இக்கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சி மாநில மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விக்னேஷ் உதயன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது,

இதில் சிவில் சர்வீஸ் தேர்வு பயிற்சியாளர் மு. முத்துக்குமார் மற்றும் கழக இளம் பேச்சாளர் ஜெ.பாலச்சந்தர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடினர். நிகழ்ச்சியில் மாணவரணி தோழர்கள் டி.ஜெ.தமிழரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் தமிழ் மாணவர் மன்றம் சார்பில் வழங்கப்பட்டது.

# காவிரிப் பிரச்சினையை திசை திருப்பும் 'டம்மி' முதலமைச்சர்!

## உதயநிதி ஸ்டாலின் ஆவேசம்! 5ஆம் பக்கத் தொடர்ச்சி...

செயல்படுத்துவது இன்னொன்று. இப்படி வாக்குறுதிகள் எதையுமே நிறைவேற்ற முடியாமல் `வாயில் வடை சுடுகிற ஆட்சி'தான் இன்றைக்கு அமைந்திருக்கக்கூடிய இந்த த.வெ.க. அரசு.

இதுவே 2006இல் கழக ஆட்சி அமைந்தபோது நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தான் சொன்னபடி 7,000 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தார். அதை எப்படி செய்தார்? அவர் முதலமைச்சராகப் பதவியேற்கிற அந்த மேடையிலேயே கோப்புகளைக் கொண்டுவந்து அங்கேயே கையெழுத்துப் போட்டார். சென்ற ஆட்சியில், நம் தலைவர் 12,000 கோடி ரூபாய் அளவிற்குப் பயிர் கடன் தள்ளுபடியை நம்முடைய தலைவர் செய்தார்.

இந்தச் சூழ்நிலையில்தான் இன்றைக்கு முழு பயிர்க்கடனையும் ரத்து செய்ய வேண்டும் என்று விவசாயிகள் போராட்டத்தை அறிவித்தீர்கள். ஆனால், சட்டமன்றத்தில் பேசிய முதலமைச்சர் என்ன தெரியுமா சொன்னார்? தி.மு.க.வின் தூண்டுதலால் இன்றைக்கு விவசாயிகள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்று உங்களுடைய போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியவர் இன்றைய முதலமைச்சர் அவர்கள்.

கழக ஆட்சி நடந்தபோது மேகதாது அணையைக்கட்ட விடாமல் நாம் கர்நாடகாவைத் தடுத்தோம். ஆனால், இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒரு மிக பலவீனமான ஆட்சி அமைந்திருக்கிறது. இந்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்தி மேகதாதுவில் அணை கட்டிவிடலாம் என்று கர்நாடக அரசு முழு முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

இந்த அரசு, மேகதாது அணை கூடாது என்று சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் அறிவித்தது. அப்போது அதை ஆதரித்து நான் பேசினேன். மேகதாது பிரச்சினை மிக மிக முக்கியமான ஒரு பிரச்சினை. இது கட்சிகள் கடந்து அனைவரும் ஒற்றுமையோடு இருக்க வேண்டிய பிரச்சினை. இந்த அரசு உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஒன்றாகச் சென்று ஒன்றிய அரசுக்கு நாம் நம்முடைய அழுத்தத்தைக் கொடுப்போம் என்று சொன்னேன். ஒன்றிய அரசுக்கு அழுத்தத்தைக் கொடுப்போம் என்றுதான் சொன்னேன், உடனே ஆட்சியாளர்கள் பயந்துவிட்டார்கள்.

நேற்று கர்நாடகாவில் அனைத்துக் கட்சிக்கூட்டத்தைக் கூட்டி, காவிரி பிரச்சினையில் அவர்களுடைய ஒற்றுமையை இன்றைக்கு அவர்கள் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இங்கு இருக்கக்கூடிய இந்த முதலமைச்சர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்துவதையே மிகவும் ஒரு அவமானமாக நினைக்கிறார்.

**ஏக்கருக்கு 25,000 ரூபாய்!**

குறுவையைப் பொறுத்தவரைக்கும் கடந்த வருடம் 6.5 லட்சம் ஏக்கரில் சாகுபடி நடந்தது. ஆனால், இந்த வருடம் வெறும் 1.5 லட்சம் ஏக்கரில் தான் சாகுபடி ஆகியிருக்கிறது. கிட்டத்தட்ட 14 லட்சம் விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 2,500 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு இன்றைக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆகவேதான் ஏக்கருக்கு 25,000 ரூபாய் நிவாரணம் கொடுங்கள், பயிர்க்காப்பீட்டிற்கான பிரீமியத்தை அரசே செலுத்த வேண்டும், சம்பா சாகுபடிக்கு விதை, உரம், பூச்சி க்கொல்லி இவற்றையெல்லாம் மானியமாக அரசு கொடுக்க வேண்டும் என்று நம்முடைய தலைவர் அவர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்தார்.

ஆனால் இந்தக் கோரிக்கையையும் ஏற்க இந்த அரசு தயாராக இல்லை. அதனால்தான் இன்றைக்கு வீதிக்கு வந்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். நாம் இவர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, முழு பயிர்க்கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும், மேகதாது அணை கட்டுவது, தடுத்து நிறுத்தப்பட வேண்டும், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகையைச் செலுத்த வேண்டும், அதற்கு மிக மிக முக்கியமாக இந்த டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்தாக வேண்டும் என்று நம்முடைய கோரிக்கையை மீண்டும் இந்த அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

விவசாயிகள் தொடர்பான இந்த பிரச்சினைகளையெல்லாம் வருகிற சட்டமன்றக் கூட்டத்தொடரில் விவாதித்து தீர்க்கப்படவேண்டும். இரண்டு நாளில் சட்டமன்றம் கூடுகிறது. ஐந்தாம் தேதி ஆரம்பிக்கிறது, சும்மா விடமாட்டோம். வருகிற சட்டமன்றக் கூட்டத்தொடரில், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நிச்சயமாக இந்தப் பிரச்சினையை எழுப்புவோம்.

சட்டமன்றம், நீதிமன்றம், மக்கள் மன்றம் என அனைத்து இடங்களிலும் விவசாயிகளுக்கு ஆதரவாக, உங்களுடைய குரலாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் ஒலிக்கும். டெல்டா விவசாயிகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்குமே பக்கபலமாக இருக்கும்.

**தமிழ்நாட்டின் உரிமை!**

காவிரிப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமையை என்றைக்கும் நிலைநாட்டுவோம் என்று சொல்லி, இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த நம்முடைய முதன்மைச் செயலாளருக்கும், கழகத் தலைவர் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், உங்கள் அத்தனை பேருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

**பங்கேற்றவர்கள்!**

கழகத்தின் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், தோழமை இயக்கங்களின் தலைவர்கள் ஜவாஹிருல்லா, தமீமுன் அன்சாரி, அபுபக்கர் சித்திக், ஜக்கய்யா, எம்.என்.ராமச்சந்திரன், ஜெயக்குமார்,

மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான துரை.சந்திரசேகர், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ரகுபதி, வைத்திலிங்கம், சி.வெ.கணேசன், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவி.செழியன், மெய்யநாதன், மதிவாணன்,

மாவட்டக் கழகச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன், தி.பழனிவேல், காடுவெட்டி தியாகராஜன், நிவேதா முருகன், கௌதமன், செல்லபாண்டியன், வைரமணி, துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கல்யாணசுந்தரம், முரசொலி, அருண் நேரு, குத்தாலம் கல்யாணம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், தோழமை இயக்கங்களின் நிர்வாகிகள் பி.எஸ்.சிவநேசன், எம்.எஸ். கண்ணன், ஆரோக்கியசாமி, பல்வேறு விவசாயச் சங்கங்களின் நிர்வாகிகள், காவிரி தனபால், இளங்கீரன், பூ.ரா.விஸ்வநாதன், கக்கரை சுகுமாரன், தெய்வசிகாமணி, பழனியப்பன், கோபி கணேசன், தளபதி, ராமசாமி, கோவிந்தராஜ், முகமது இப்ராகிம்,

சட்டமன்ற உறுப்பினர்கள் அண்ணாதுரை, அசோக்குமார், கதிரவன், மருத்துவர் முத்துராஜா, சபா ராஜேந்திரன், கலைக்கதிரவன், மாநகரச் செயலாளர் சண்.ராமநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் அப்துல்லா, வீரமணி, இளையராஜா, அப்துல் மாலிக், ஜித்து, பி.என். மணி, வெங்கடேசன், சின்னையன், கோவிந்தராஜ், ரவிச்சந்திரன், வினோத்குமார், சுப்பிரமணியன் உள்பட கழக முன்னணியினர், கூட்டணிக்கட்சித் தலைவர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள், பொதுமக்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை மிசா கு. பாலகிருட்டிணன்
### ஆகஸ்ட் 5 (2013)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, மன்னார்குடி நகரச் செயலாளர் – மன்னார்குடி வட்டக் கழகச் செயலாளர் – தஞ்சை மாவட்ட பொருளாளர் – திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர் – பொதுக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை வகித்து, முழுநேர கழகப் பணியாற்றியவர்.**

**கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும், மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பொறுப்பேற்று, அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதுடன், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கடுங்காவல் தண்டனையும் – மிசா கைதியாக ஓராண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# த.வெ.க. ஆட்சியில் சேலம் மாவட்டத்தில் பாலுக்கு கடும் தட்டுப்பாடு!

சேலம், ஆக. 5 -

சேலம் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியத்தில் 800 தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் உள்ளனர்.

இங்கிருந்து தினசரி 2.5 லட்சம் லிட்டர் பால் உற்பத்தியாளர்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது தற்போது தனியார் பால் விற்பனையாளர்கள் பாலுக்கு கூடுதல் விலை கொடுத்து அவர்கள் கொள் முதல் செய்து

வருவதால் சேலம் ஆவின் பால் கொள்முதலில் அளவு குறைந்து விட்டது. அதாவது தினசரி 5.40 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து வந்ததில் 80 ஆயிரம் லிட்டர் பால் குறைந்து விட்டது

இதனால் ஆவினின் பால் கொள்முதல் குறைந்து விட்டதால் உள்ளூர் பால் வியாபாரிகளுக்கு 30% வீதம் விநியோகம் குறைத்து விநியோகம் செய்யப்படுகிறது

இதனால் ஆவின் பால் கிடைக்காமல் பொது மக்கள் ஏமாற்றத்துடன் செல்லுவதோடு தனியார் பாலை விலை அதிகம் கொடுத்து வாங்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அதே போல டீ காபி கடைகளில் பெரும்பாலும் ஆவின் பால் மூலம் காப்பி டீ போட்டு விற்பனை செய்ததில் ரூ.10 முதல் ரூ.12 வரை விற்பனை செய்தார்கள் தற்போது தனியார் பால் வாங்கு வதால் டீ ரூ15 என்றும் காப்பி ரூ.20 ஆகவும் விற்பனை செய்து வருகிறார்கள் என்பது குறிபிடதக்கதாகும்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஆர். இராமசாமி
### ஆகஸ்ட் 5 (1971)



**திராவிட இயக்க காலத்திலிருந்து அண்ணா – கலைஞர் ஆகியோரின் கலையுலகப் பயணத்தில் கிடைத்த மாணிக்கம். நடிப்பிலும், பாடுவதிலும் சிறந்து விளங்கியவர். 'நடிப்பிசைப்புலவர்' என நாட்டு மக்களால் அழைக்கப்பட்டவர்.**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களில் ஒருவராக விளங்கியவர். கழகப் பொதுக்குழு உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவராகவும், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் இணைச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**தி.மு.கழக துவக்க காலம் முதல் கழகத்திற்காக கலையுலகில் ஈட்டிய புகழையும், பொருளையும் அர்ப்பணித்தவர்.**

**தேர்தல் களத்தில் கழகம் ஈடுபட்ட வேலைகளில் தீவிரமாகப் பிரச்சாரப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்.**

**"பழகுதற்கு இனியவர், பகுத்தறிவுச் சுடர், பாசத்திற்குரிய நண்பர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**